## பத்திரிக்கைச் செய்தி

## தவறுதலாக பதிவு செய்யப்பட்ட பத்திரங்களை ரத்து செய்து மாவட்ட பதிவாளர் அமுல்படுத்திய செயல்முறை ஆணையை செயல்படுத்த ரூ.1,00,000/- லஞ்சம் கேட்டு பெற்ற உதவியாளர், மாவட்ட பதிவாளர் அலுவலகம் மற்றும் தற்காலிக கணினி உதவியாளர் கைது

புகார்தாரர் திரு.உலகநாதன், வேளச்சேரி, சென்னையில் வசித்து வருகிறார். புகார்தாரரின் மாமியார் திருமதி.பத்மாவதிக்கு பரம்பரை சொந்தமான நிலம் காஞ்சிபுரம் மாவட்டம் வாலாஜாபாத்தில் உள்ளது. திருமதி.பத்மவாதியின் தந்தை திரு.பாலையா, உயிருடன் இருக்கும் போது தன்னுடைய மூத்த மகன் திரு.பச்சையப்பன் என்பவருக்கு இந்த நிலத்திற்கு பவர் பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளார். திரு.பாலையா இறந்த பின் அவருடைய மூத்த மகன் திரு.பச்சையப்பன் தன்னுடைய தந்தை உயிருடன் இருப்பது போன்று போலியான ஆவணங்கள் தயார் செய்து நிலத்தினை நான்கு பேருக்கு விற்பனை செய்துள்ளார். இதனை கேள்விப்பட்ட திருமதி.பத்மவாதி அவர்கள் இது சம்பந்தமாக புகார் மனு ஒன்றை காஞ்சிபுரம் மாவட்ட பதிவாளர் அவர்களிடம் சமர்ப்பித்துள்ளார். புகார் மனு சரியான முறையில் விசாரணை செய்யவில்லை என்பதால் திருமதி.பத்மாவதி அவர்கள் இது சம்பந்தமாக உரிய விசாரணை நடத்தி நிலத்தினை மீட்டுதருமாறு சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தார். வழக்கின் தீர்ப்பில் இந்த புகார் மனு சம்பந்தமாக உடனடியாக விசாரணை நடத்தி உரிய ஆணை பிறப்பிக்குமாறு உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக மாவட்ட பதிவாளர் உரிய விசாரணை நடத்தி மேற்படி போலி ஆவணங்கள் மூலமாக பதிவு செய்யப்பட்ட நிலத்திற்குண்டான பத்திரங்களை ரத்து செய்து செயல்முறை ஆணை 09.08.2023 அன்று பிறப்பித்தார். இந்த செயல்முறை ஆணையினை சார் பதிவாளர் அலுவலகம். வாலாஜாபாத் அலுவலகத்திற்கு அனுப்பிவைக்க் திரு.நவீன்குமார், உதவியாளர், மாவட்ட பதிவாளர் அலுவலகம், காஞ்சிபுரம் அவர்கள் புகார்தாரரின் மாமியார் திருமதி.பத்மாவதி அவர்களிடம் லஞ்சமாக ரூ.2,00,000/- கொடுக்க வேண்டும் என கேட்டுள்ளார். பின்னர் லஞ்ச தொகையினை ரூ.1,00,000/- மாக குறைத்து கேட்டுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, காஞ்சிபுரம் பிரிவில் புகார் மனு கொடுத்துள்ளார். இப்புகார் சம்பந்தமாக வழக்கு பதிவு செய்யப்பட்டு இன்று 25.08.2023ம் தேதி பொறிவைப்பு நடவடிக்கை

மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின் போது திரு.நவீன்குமார், உதவியாளர் அவர்களின் உத்தரவின் பேரில் திரு.சந்தோஸ்பாபு, தற்காலிக கணினி உதவியாளர், சார் பதிவாளர் அலுவலகம், காஞ்சிபுரம் அவர்கள் லஞ்ச பணமான ரூ.1,00,000/-த்தை புகார்தாரரிடமிருந்து கேட்டு பெற்று அருகில் உள்ள தன்னுடைய இல்லத்தில் சென்று வைத்துள்ளார். பின்னர் அவர் அலுவலகம் வந்தபோது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறையினரால் விசாரணை செய்யப்பட்டார். இதன்பின் திரு.நவீன்குமார், உதவியாளர், மற்றும் திரு.சந்தோஸ்பாபு ஆகியோர்கள் கைது செய்யப்பட்டனர்.